## தலைப்பு 261–காலி மாவட்டச் செயலகம்

### 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

காலி மாவட்டச் செயலகத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் காலி மாவட்ட செயலகத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் உள்ளடங்கிய பொழிப்பு அறிக்கை 2022 மே 30 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வுச் சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் மாவட்டச் செயலகம் தொடர்பான வருடாந்த விரிவான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2022 மே 30 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இவ் அறிக்கையின் 1.6 பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினை தவிர்த்து, 2021 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறான காலி மாவட்ட செயலகத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச்செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இவ் அறிக்கை 1.6 பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படும் இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமான உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் மாவட்டச் செயலகத்தினால் வருடாந்த மற்றும் காலரீதியானநிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கக் கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் முறையாகப் பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் மாவட்டச் செயலகத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்துதல் வேண்டியதுடன், அம்முறைமையின்

ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களில் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன், அதன் பொருண்மை தன்மையை இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் எடுக்கப்படும் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்பட வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.
- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும், நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாக,

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டது.

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் நேரொத்துள்ளதாக.

(ஆ) முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் என்னால் மேற்கொள்ளப்பட்டிருந்த பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டிருந்தன.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

#### (அ) மீண்டெழும் செலவுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | மீளாய்வாண்டில் நிதிக் கூற்றுக்களில் கடப்பாடு மற்றும் பொறுப்புக்கள் பெறுமதி ரூபா 221,504 குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | பந்தியில் குறிப்பிடப்பட்ட பொறுப்புக்கள் சிகாஸ் நிகழ்ச்சித்திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருந்த போதும் கணனி அச்சுக் குறிப்புக்களில் சுட்டிக்காண்பிக்கப்படாதிருந்ததுடன் பொறுப்பாக இனங்கண்டு செலவினங்கள் உருவாகியுள்ளதால் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளது | சரியான தகவல்கள் நிதிக்கூற்றுக்களில் குறிப்பிடப்பட வேண்டும் |

#### (ஆ) ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | நிதியல்லாத சொத்துக்களான கட்டிடங்கள் மற்றும் மோட்டார் வண்டிகள் மற்றும் இயந்திர உருப்படிகளில் திணைக்களத்தின் புத்தகங்களின் பிரகாரம் திறைசேரியின் SA 82 படிவத்தின் பிரகாரம் ஆரம்ப மீதியில் ரூபா 33.969 மில்லியனான வேறுபாடொன்று மற்றும் கொள்வனவுகளில் ரூபா 2.438 மில்லியனானன வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது. | 05 பிரதேச செயலகங்களில் இவ்வாண்டு ஆரம்ப மீதிகளாக உள்ளடக்கப்பட்ட கட்டிடங்கள் மற்றும் இயந்திரங்களின் பெறுமதிகள் சில ஆரம்ப மீதிகள் நிரலுக்கு கூட்டப்பட்டமை இந்த வேறுபாடுகளிற்கு காரணமாக இருந்தது.<br><br>இறுதி கணக்குகள் தயாரிக்கும் வரை சீராக்கப்படாமல் இருந்ததுடன் நிதியமைச்சினால் வழங்கப்பட்ட ஆலோசணையின் பிரகாரம் நடவடிக்கை எடுப்பேன் | திணைக்கள புத்தகங்கள் மற்றும் திறைசேரிப் புத்தகங்கள் ஒப்பிடப்பட்டு நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டும் |

| | | | |
|---|---|---|---|
| (ii) | நிலையான சொத்துக்கள் பதிவேட்டின் பிரகாரம் கடவத்சதர பிரதேச செயலகத்திற்குரிய பியதிகம மாணவர் படையணி கட்டிடம், மாதம்பாகம புதிய பிரதேச செயலகத்தின் கட்டிடங்கள் மதிப்பீடு செய்து பெறுமதிகளை கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | குறித்த கட்டிடத்தை மதிப்பீடு செய்வதற்காக விலை மதிப்பீட்டுத் திணைக்களத்திற்கு 2022 ஏப்ரல் 19 ஆந் திகதி அனுப்பிவைக்கப்பட்டுள்ளதுடன் அவ்வறிக்கை கிடைத்தவுடன் கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன் | பிரதேச செயலகத்திடமுள்ள அனைத்து சொத்துக்களையும் மதிப்பீடு செய்து கணக்கீடு செய்யப்பட வேண்டும் |
| (iii) | உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் மூலம் காலி மாவட்ட செயலகத்திற்கு வழங்கப்பட்டிருந்த மூன்று கெப் வண்டிகளின் பெறுமதியான ரூபா 41.985 மில்லியன் நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை | இக்கெப் வண்டிகளின் பெறுமதியை 2022 ஆம் ஆண்டின் போது கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பேன். | அனைத்து சொத்துக்களும் கணக்கீடு செய்யப்பட வேண்டும் |
| (iv) | பிரதேச செயலகத்திற்கு கையளிக்கப்பட்டிருந்த மாகாண கல்வித் திணைக்களத்திற்குரிய மூடப்பட்டிருந்த 78 பாடசாலைகளின் 107 ஏக்கர் காணி மற்றும் 125 கட்டிடங்கள் மீளாய்வாண்டின் இறுதி வரை மதிப்பீடு செய்து கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை | இந்த பாடசாலைக் காணிகள் மற்றும் கட்டிடங்களின் உடமை பிரதேச செயலாளருக்கு கையளிக்கப் பட்டிருந்தால் அச்சொத்துக்களை மதிப்பீடு செய்து கணக்கீடு செய்ய எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்பேன். | பிரதேச செயலகத்திற்கு கையளிக்கப்பட்டுள்ள அனைத்து காணி மற்றும் கட்டிடங்களையும் மதிப்பீடு செய்து கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (v) | கணிப்பீட்டு சபை அறிக்கையின் பிரகாரம் பிரதேச செயலகத்திற்குரிய ரூபா 2,188,816 ஆன நிலையான சொத்துக்களை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் பெறுமதி ரூபா 1,998,756 ஆக இருந்தமையால் ரூபா 190,060 ஆன வேறுபாடு காணப்பட்டது | ரூபா 379,500 பெறுமதியான சிகாஸ் நிகழ்ச்சியொன்றை உள்ளடக்கும் போது ஆரம்ப மீதியுடன் கூட்டப்பட்டமை, மேலும் 2103 ஆம் இலக்க செலவின விடய இலக்கத்தின் கீழ் கொள்வனவு ரூபா 569,500 என பதிவு செய்யப்பட்டமை காரணமாக இருந்தது. | கணக்காய்விற்கு சரியான தகவல்கள் வழங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (vi) | ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களின் கீழ் மாவட்ட செயலகத்திற்கும் பிரதேச செயலகங்களுக்கும் கிடைக்கப்ப பெற்றிருந்த ரூபா 109.4 மில்லியன் 7 செலவின விடயங்களுக்குரிய சொத்துக்கள் மாவட்ட செயலகத்தின் சொத்துக்களாக பொறுப்பேற்று கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை | 2101 முதல் 2105 வரையான செலவின விடயங்களின் கீழ் கையேற்கப்பட்ட சொத்துக்கள் மாத்திரம் 261 இல் உள்ளடக்கலாம். ஏனைய அமைச்சின் சொத்துக்கள் உரிய அமைச்சினால் கணக்கீடு செய்யப்பட்டு நிதிக்கூற்றுக்களில் சமர்ப்பிக்கப்படுகின்றது. | ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களின் நிதிஏற்பாடுகளின் கீழ் வழங்கப்பட்டிருந்த சொத்துக்களின் உரித்து மாவட்ட செயலகத்திற்கு உள்ளதாக இருப்பதால் தலைப்பு இலக்கம் 261 இன் கீழ் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்படுவது நியாயமாகும். |
| (vii) | காலி மாவட்ட செயலகத்தின் 05 மற்றும் 06 ஆம் இலக்க மாடிகளை நிர்மாணிப்பதற்காக மாகாண சபையால் செலவிடப்பட்டிருந்த மற்றும் அக் கணக்குகுளுக்கு உள்ளடக்கப்பட்டிருந்த ரூபா 55 மில்லியன் தொகை 261 ஆம் இலக்க செலவின தலைப்பின் கீழ் நிதியல்லாத பெறுமதிக்கு உள்ளடக்கப்பட்டிருந்ததால் கட்டிடத்தின் பெறுமதி அப்பெறுமானத்தினால் கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது. | 2003 ஆம் ஆண்டின் போது இந்த மாவட்ட செயலக கட்டிடத்தினை நிர்மாணிக்கும் போது நிதிஏற்பாடு பற்றாக்குறை அடிப்படையில் 05 மற்றும் 06 ஆம் மாடிகள் நிர்மாணத்திற்காக மாகாண சபையால் ரூபா 55,000,000 செலவிடப்பட்டிருந்தது.<br><br>இக்கட்டிடத்தை மதிப்பீடு செய்யும் போது முழுக் கட்டிடத்திற்கும் மதிப்பீடு செய்யப்பட்டிருந்தமையால் அதன் முழுப்பெறுமதியும் 261 ஆம் இலக்க செலவின தலைப்பின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டதாக தயவுடன் அறிய தருகின்றேன். | நிதியல்லாத சொத்துக்களின் பெறுமதி சரியாக நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்த வேண்டும் |

**(இ) கட்டுநிதிமீதி**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கரந்தெனிய பிரதேச செயலகத்தில் 2006 ஆண்டு ஏற்பட்டிருந்த மோசடி ஒன்றின் காரணமாக கட்டுநிதிக் காட்டப்பட்டிருந்த ரூபா 194,086 தொகைக்கான தீர்க்கப்படாத மீதி 15 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் முதல் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் அதனைத் தீர்ப்பதற்கு மீளாய்வாண்டின் போதும் | கரந்தெனிய பிரதேச செயலகத்தில் ஏற்பட்டிருந்த காசோலை மோசடி ஒன்றின் காரணமாக ரூபா 194,086 இது தொடர்பாக பலபிடிய மாவட்ட நீதிமன்றில் இலக்கம் 93067 இன் கீழ் வழக்கொன்று விசாரணை நடைபெற்றுக்கொண்டிருப்பதுடன், காலி நீதவான் நீதி மன்றில் இலக்கம் 8518/M இன் கீழ் | வழக்குத் தீர்ப்பின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | விசாரிக்கப்பட்ட வழக்கில் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது. | |

**(ஈ) காசுப்பாய்ச்சல் கூற்று**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் போது ஆரம்ப காசு மீதி ரூபா 194,086 தொகை காசுப் பாய்ச்சல் கூற்றில் இறுதி மீதி கணிப்பீட்டின் போது சீராக்கம் செய்யப்பட்டிருக்கவில்லை. மீளாய்வாண்டின் இறுதி காசு மீதியை சீராக்கும் போது முன்னைய ஆண்டின் இறுதி மீதி திறைசேரிக்கு தீர்வுசெய்யப்பட்டு மீண்டும் நடப்பாண்டில் கட்டுநிதிக்கு செலவு வைக்கப்பட்டால் குறிப்பொன்றின் மூலம் வெளிப்படுத்த வேண்டிய போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | இதற்கு பின்னர் இவ்விடயத்தை குறிப்பொன்றின் மூலம் வெளிப்படுத்த நடவடிக்கை எடுப்பேன். | பதிலின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 2 நிதி மீளாய்வு

### 2.1 செலவின முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மேலதிக நேரம் மற்றும் விடுமுறை தினப்படிகள் கொவிட் 19 காரணமாக வீட்டில் தனமைப்படுத்தப்படும் மற்றும் வாழவாதாரத்தை இழந்த குடும்பங்களுக்காக நிவாரணம் வழங்குதல் மற்றும் பதவியணியனர் பயிற்சியளித்தல் ஆகிய 3 செலவின விடயங்களிலருந்து முறையே ரூபா 1.350 மில்லியன், ரூபா 119.725 மில்லியன் மற்றும் ரூபா 3.186 மில்லியனான ஏற்பாடுகள் சேமிக்கப்பட்டிருந்தன. | செலவின விடயம் 1002 இல் நிதி ஏற்பாடு மாற்றப் பட்டிருந்ததுடன் அந்நிதி ஏற்பாடுகள் அனைத்தும் பயன்படுத்தப்பட்டிருந்தன. தனிமைப்படுத்தப்பட்ட குடும்பங்கள் தொடர்பான விபரங்கள் தாமதமாகி கிடைத்தமை மற்றும் சுற்றறிக்கை பிரகாரம் வாழ்வாதாரத்தை இழந்த குறைந்த வருமானத்தை பெறும் குடும்பங்களுக்காக ரூபா 2,000 படிகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டமையால் இந்நிதி ஏற்பாடு அளவு சேமிக்கப்பட்டது. பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் ஆரமப்பிக்கப்படாமை | தேவைப்பாட்டினை இனங்கண்டு நிதிஏற்பாடுகளை மாற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ஆ) ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்கள் 12 இடமிருந்து கிடைத்தரூபா 2,361.737 மில்லியன் மாத்திரம் செலவிடப்பட்டிருந்த மையால் 33 சதவீதமான அளவில் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | 2021 ஆம் ஆண்டில் எதிர்பார்த்த பிரகாரம் வேலைப் பகுதிகளை பூர்த்தி செய்வதற்கு முடியாமல் போனமை, கட்டுநிதி கிடைக்காமை, கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்களை சமர்ப்பிப்பதில் தாமதம் போன்ற விடயங்கள் காரணங்களாக இருந்தன | ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்கள் இடமிருந்து கிடைக்கும் அனைத்து பணத்தையும் உரிய செயற்பாட்டிற்கு பயன்படுத்த வேண்டும். |

## 2.2 பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளுக்கு உட்படல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2021 ஆண்டில் செயற்படுத்தப்பட்ட அபிவிருத்தி மற்றும் ஏனைய செயற்திட்டங்களுக்காக 21 பிரதேச செயலகங்களுக்குரிய 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கொடுப்பனவு செய்ய வேண்டிய பட்டியல்களின் பெறுமதி ரூபா 220.551 மில்லியனாக இருந்தது. | நிதிஏற்பாடுகளை வழங்கப்படாமல் பொதுவாக செயற்திட்டங்கள் செயற்படுத்தப்படாமல் இருப்பதுடன் 2021 ஆம் ஆண்டின் போது அவ்வாறான எந்தவொரு திட்டமும் செயற்படுத்தப்பட வில்லை. எனினும் கட்டுநிதி கிடைப்பதில் தாமதம் காரணமாக கொடுப்பனவு செயற்பாடுகள் தாமதமானதுடன் அதன் காரணமாக கையிலுள்ள பட்டியல்கள் உருவாகியிருந்தன.<br><br>செயற்திட்டங்களுக்காக நிதிஏற்பாடு ஒவ்வொரு வரிசை அமைச்சின் மூலம் தேசிய பாதீட்டில் அங்கீகரிக்கப்பட்ட எல்லையாகும். செயற்திட்டங்களை செயற்படுத்தியதன் பின்னர் சமர்ப்பிக்கப்படும் பட்டியலுக்குரிய பெறுமதி திறைசேரி செயற்பாட்டு திணைக்களத்திற்கு அறிவிக்கப்பட்டதன் பின்னர் கட்டுநிதி உரித்தாகும். பட்டியல் சமர்ப்பிக்கப்பட்டதன் பின்னர் அறிவித்து 02 மாதங்கள் கடந்த போதும் | கையிலுள்ள பட்டியல்களுக்கு தேவையான கட்டுநிதியை விரைவில் பெற்றுக் கொண்டு பட்டியல்களைத் தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| | கட்டுநிதி கிடைக்காத சந்தர்ப்பங்கள் உள்ளன. இதன் காரணமாக கையில் பட்டியல்கள் உள்ளன. | |

**2.3 ஏனைய அமைச்சுக்கள் மற்றும்திணைக்களங்களின் ஏற்பாடுகளை பயன்படுத்துதல்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 19 பிரதேச செயலகங்களுக்குரிய 68 சமூக அடிப்படையிலான வங்கிகள் மூலம் 669,338 கடனாலிகளுக்கு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த ரூபா 21,598 மில்லியனான கடன் தொகையில் ரூபா 505.188 மில்லியன் ஆன தொகை காலம் பிந்திக் காணப்பட்டதுடன் 3,408 கடன் பெறுனர்களுக்கு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த ரூபா 160.755 மில்லியன் தொகை ஐயக்கடனாக இனங்காணப்பட்டிருந்தது. அக்கடனை விரைவில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் 114,088 கடன் பெறுனர்களுக்கு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த ரூபா 5.096 மில்லியன் நிலுவையான கடன் மீதிகளாக இனங் காணப்பட்டிருந்தது. | காலம் கடந்த கடன் மற்றும் அறவிட முடியாக்கடன் என்வற்றை அறவிடுவதற்காக வழக்கு மற்றம் சட்ட ஏற்பாடுகள் நடவடிக்கைகள் பல எடுக்கப்பட்டுள்ளன. கொவிட் 19 தொற்று, பசளை இல்லாமை, சுற்றுலாத்துறை பாதிக்கப்பட்டமை, கடன் சலுகை காலம் வழங்கப்பட்டமை போன்ற காரணங்களால் அது நிலுவையான கடனாக காணப்படுகின்றது. | வழங்கப்பட்ட கடன் தொடர்பாக பின்தொடர்நடவடிக்கை எடுத்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | கொவிட் 19 தொற்று காரணமாக 19 பிரதேச செயலகங்கள் மற்றும் 68 சமுர்த்தி வங்கிகள் மூலம் ரூபா 483.56 மில்லியன் நலனாலிகளுக்கு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதி வரை அப்பணத்தை மீள் நிரப்பப்பட்டிருக்கவில்லை. | சமுர்த்தி வங்கிக்கு சொந்தமான நிதியங்களிலிருந்து ரூபா 483.56 மில்லியன் தொகை பொது திறைசேரியிடமிருந்து சமுர்த்தி திணைக்களத்திற்கு மீள் நிரப்பல் அடிப்படையில் நலனாலிகளுக்கு வழங்கப்பட்டிருந்தன. எனினும் இதுவரை பொது திறைசேரியிடமிருந்து எந்தவொரு மாவட்டத்திற்கும் இப்பணம் மீளளிக்கப்பட்டிருக்க வில்லை. | மீளளிக்கப்பட வேண்டிய பணத்தை விரைவில் மீளளிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | இரண்டாம் கட்டத்தின் கீழ் ஸ்மார்ட் ஸ்ரீலங்கா நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் | இந்த பிரதேச செயலகங்களுக்கு | நிகழ்ச்சித்திட்டத்தை செயற்படுத்துவதற்கு |

| | | | |
|---|---|---|---|
| | மாவட்ட தொழில்தறை வழிகாட்டல் நிலையம் அமைக்கப்பட்டு slieg app கணனி மென்பொருள் ஊடாக தொழிலை எதிர்பார்ப்போரை பதிவுசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்த போதும் செயற்திட்டம் இடைநடுவில் நிறுத்தப்பட்டுள்ளதால் வழங்கப்பட்டிருந்த 38 கணனிகளும் குறைபயன்பாட்டில் காணப்பட்டன. | வழங்கப்பட்ட கணனிகளை உரிய திணைக்கள உத்தியோக த்தர்கள் மற்றும் ஏனைய உத்தியோகத்தர்கள் கடமைகளுக்காக தற்போது பயன்படுத்தி வருவதுடன் மாவட்ட நிலையத்தின் புனரமைப்பு செயற் பாடுகள் நிறைவு பெற்றவுடன் ஏனைய வசதிகளை வழங்கி தற்போது இச்செயற் திட்டத்தின் பொறுப்புக்கள் கையளிக்கப்பட்டுள்ள தேசிய நிறுவனமான மனிதவலு மற்றும் தொழில் வாய்ப்பு திணைக்களத்தின் ஒத்துழைப்பு, வழிகாட்டல் மற்றும் ஆலோசணையின் பிரகாரம் அடுத்த நடவடிக்கைகளை மேற்கொள்வதாக அறிய தருகின்றேன். | பொறுப்பு கையளிக்கப்பட்ட நிறுவனம் ?நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் கணனிகளை பயன்படுத்த தேவையான நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஈ) | Integrated Treasury Management Information System (ITMIS) நிகழ்ச்சித்திட்டத்திற்காக நிதி மற்றும் ஊடகத்துறை அமைச்சிடமிருந்து கிடைத்திருந்த ரூபா 7.8 மில்லியனான 48 மடிக் கணனிகள் 2018 ஆம் ஆண்டிலிருந்து பயன்படுத்தப் படாமல் மீளாய்வாண்டின் இறுதி வரை 08 பிரதேச செயலகங்களில் விளைவற்றுக் காணப்பட்டன. | (ITMIS) நிகழ்ச்சித் திட்டம் 2022 மார்ச் 01 முதல் செயற்படுத்தல் ஆரம்பிக்கப்பட்டதுடன் அதற்காக கிடைத்த கணனிகளை குறித்த நிகழ்ச்சித்திட்டத்திற்காக தற்போது ஈடுபடுத்தியுள்ளதாக தயவுடன் அறிய தருகின்றேன். | விளைவற்று காணப்படும் கணனியை முறையாக பயன்படுத்தவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (உ) | மீளாய்வர்ணடின் இறுதியில் 14/2019 ஆம் இலக்க பொது நிர்வதாக சுற்றறிக்கையின் பிரகாரம் பத்தேகம பிரதேச செயலகத்தில் முறையே 25 ஆண்டுகள், 13 ஆண்டுகள் மற்றும் 10 ஆண்டுகளுக்கு மிகைத்த காலப்பகுதியில் 13, 16 மற்றும் 11 கோவைகளில் ஓய்வூதியம் திருத்தம் செய்யப்பட்டிருக்க வில்லை. | திருத்தம் செய்து கொடுப்பனவு செய்துள்ள கோவைகள் 19 ஆகும். வந்துரப பிரதேச செயலகத்திற்கு மாற்றப்பட்ட கோவைகள் 07 ஆகும். திருத்தம் தேவைப்பாடத கோவைகள் 4 ஆகும். மேலும் தயாரிப்பதற்கு உள்ள 05 கோவைகள் தொடர்பாக அடுத்து வரும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. | நாளதுவரையாக்கி திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

(ஊ) சௌபாக்கிய உற்பத்தி கிராம நிகழ்ச்சித்திட்டம் - 2021

| | | | |
|---|---|---|---|
| (i) | நிதி அமைச்சின் கீழ் உள்ள சமுர்த்தி, வீட்டுப் பொருளாதார, நுண்நிதி, சுயதொழில் மற்றும் வியாபார அபிவிருத்தி இராஜாங்க அமைச்சு மூலம் செயற்படுத்தப்படும் சௌபாக்கிய நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் கயிறு திரிக்கும் செயற்பாட்டிற்காக கொள்வனவு செய்வதற்கு எதிர்பார்த்த ரூபா 1,050,000 ஆன இயந்திரம் கொள்வனவு செய்யப்படாதிருந்ததுடன் ரூபா 600,000 ஆன 3 இயந்திரங்கள் பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை. செயற்திட்டம் 2021 யூன் மாதத்தில் ஆரம்பிக்கப்பட இருந்த போதும் கணக்காய்வு திகதியான 2022 யூன் வரையிலும் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை<br><br>மேலும் செயற்திட்டத்திற்கு உரிய வீதிகளின் அபிவிருத்திக்கு ரூபா 2,500,000 தொகை மதிப்பீடு செய்யப்பட்டிருந்த போதும் அது தொடர்பாக எந்தவொரு செயற்பாடும் இடம் பெற்றிருக்கவில்லை. விற்பனை தொடர்பாக உரிய நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை | குறித்த கிராம சேவையாளர் பிரிவுகளில் அனைத்த நலனாலிகளும் சேர்ந்து சங்கமொன்றை அமைத்து இச்செயற்திட்டத்தின் அடுத்துவரும் செயற்பாடுகளை ஒழுங்குபடுத்துல் மற்றும் பதிவுக்கு தேவையான ஆரம்ப வேலைகளை மேற்கொண்டிருந்த போதும் குடும்பங்களின் உறுப்பினர்கள் கொவிட் தொற்று நிலைமைக்கு முகங்கொடுக்க நேர்ந்தமை காரணமாக சங்கத்தை பதிவு செய்வதற்கு தாமதமானது திட்டமிடப்பட்ட பிரகாரம் செயற்படுத்த முடியாமல் இருந்தது | திட்டமிடப்பட்ட பிரகாரம் மற்றும் நோக்கங்களை நிறைவேற்றப்படும் வகையில் செயற்பாடுகளை ஆரம்பிக்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) | கயிறு திரிக்கும் இயந்திரங்களை வைத்திருந்த சமூக மண்டபத்தின் வலை வேலி அமைப்பதற்காக ரூபா 1,600,000 தொகை, நீரைப் பெற்றுக்கொள்வதற்காக ரூபா 50,000 தொகையும் மலசலகூட முறைமையை புனரமைப்பதற்காக ரூபா 150,000 அங்கீகரிக்கப் பட்டிருந்த போதும் அச்செயற்திட்டங்கள் நிறை வேற்றப்பட்டிருக்கவில்லை | நிதிஏற்பாடு ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த போதும் எந்தவொரு ஒப்பந்தக்காரரும் முன்வராததனால் செயற்திட்டத்தை செயற்படுத்துவதற்கு முடியாமல் இருந்தது. நீர் வழங்கல் பெற்றுக் கொள்ளவும் மலசலகூட முறைமையை திருத்தம் செய்வதற்கும் மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருந்த போதும் இயந்திரங்கள் கிடைக்காமையால் செயற்பாடுகளை நிறைவேற்ற முடியாமல் இருந்தது. | குறித்த நிறுனங்கள் மற்றும் வளங்களை கூட்டிணைத்துக்கொள்ளல் செயற்திட்டத்தின் மூலம் நிறைவேற்ற வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (iii) | கோனபீனுவெல பிரதேச செயலகத்தினால் பொது உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்திக்கு ரூபா 5.5 மில்லியன் நிதிஏற்பாடு அங்கீகரிக்கப்பட்டிருந்த 04 செயற்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை | கடும் மூலப்பொருள் பற்றாக்குறையால் செயற்திட்டம் 2022 ஆம் ஆண்டிற்கு தொடர் வேலையாக்க ஆலோசணை வழங்கப்பட்டதால் இந்த 4 செயற்திட்டங்களை நிதியாண்டில் செயற் படுத்த முடியவில்லை. | ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதிஏற்பாடுகளை திட்டமிட்ட பிரகாரம் பயன்படுத்த நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |
| (iv) | கருவலபெத்த கைத்தறி புடவைக் கைத்தொழில் உற்பத்தி கட்டிடத்திற்கு நுழையும் வீதியின் ஓரச் சுவருடன் அபிவிருத்தி செய்வதற்காக கிடைத்திருந்த நிதிஏற்பாடு ரூபா 2,000,000 ஆக இருந்த போதும் செயற்திட்டத்தை நிறைவேற்றுவதில் தாமதம் காரணமாக ரூபா 1,404,994 ஆன நிதிஏற்பாடு மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது. | 2022 ஏப்ரல் 26 ஆந் திகதிய 3/2022 ஆம் இலக்க நிதி அமைச்சின் சுற்றறிக்கையின் கீழ் நாட்டில் காணப்படும் சீரற்ற பொருளாதார நிலைமையில் குறித்த செயற்திட்டங்களை செயற்படுத்த முடியாத நிலைமை உருவாகியுள்ளது. எஞ்சிய செயற்பாடுகள் 2022 ஆம் ஆண்டின் இரண்டாம் காலாண்டில் மேற்கொள்வதற்கு அங்கீகாரம் கிடைத்துள்ளது. | - மேற்படி - |
| (எ) | சீரற்ற காலநிலை காரணமாக பாதிப்பிற்கு உள்ளான மக்களை மீள்குடியேற்றும் செயற்திட்டம் | | |
| (i) | இச்செயற்திட்டத்தின் கீழ் பத்தேகம பிரதேச செயலக பிரிவில் கனேகம தெற்கு உடதெனியாவத்தவில் குடியிருப்பதற்கு வீடொன்றை அமைப்பதற்காக ரூபா 1,300,000 தொகை வழங்கப்பட்டிருந்த போதும் கணக்காய்வு திகதியான 2021 ஒக்தோபர் 12 வரை வீட்டின் வேலைப்பகுதிகள் பூர்த்தி செய்யப்படாதிருந்ததுடன் அந்நபர் அங்கு ஆபத்துடன் கூடிய வீட்டிலேயே இருப்பதாக அவதானிக்கப்பட்டது. | வீட்டை அமைப்பதற்காக இதுவரை ரூபா 900,000 தொகைக்கு ஈடாகும் வகையில் வேலைபகுதியொன்றை அந்நலனாலியால் பூர்த்தி செய்துள்ளதாக தொழில்நுட்ப உத்தியோகத்தர் மூலம் உறுதிப்படுத்தி சமர்ப்பிக்கின்றேன். | நலன்கள் வழங்கப் பட்டிருக்கையில் அனர்த்த பிரதேசங்களிலிருந்து வெளியேறாமை தொடர்பாக பரீட்சித்து தேவையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) | வெலிவிட்டிய திவித்துறை பிரதேச செயலகப் பிரிவிற்குட்பட்ட வாடுவெலிவிட்டிய வடக்கு கிராம உத்தியோகத்தர் | பயனாளியால் காணி விற்பனை செய்யப்பட்டுள்ளதை அறிந்ததும், அது தொடர்பான மேலதிக | இச்சம்பவம் நடந்து 2½ ஆண்டுகளுக்கு மேலாகிவிட்டதால், உரிய நடவடிக்கை எடுப்பதை துரிதப்படுத்த |

| | | | |
|---|---|---|---|
| | பிரிவில் இரண்டு குடியிருப்பாளர்களுக்கு வீடுகளை நிர்மாணிப்பதற்கான மொத்தம் ரூபா 2,822,000 வேலைத்திட்டத்தின் வழிகாட்டல்களுக்கு முரணாக தவணைப் பணம் விடுவிக்கப்பட்டிருந்தது. முறையான ஒப்பந்தம் இல்லாமல் 2019 ஒக்தோபர் 20 ஆந் திகதி ஒரு நபர் மேற்படி நிலத்தையும் வீட்டையும் மற்றொரு நபருக்கு விற்பனை செய்திருந்ததுடன் 2019 மே 15 ஆந் திகதி மற்றைய நபரால் தனது நிலத்தை ரூபா 700,000 இற்கு அடமானம் வைத்துள்ளார். பிரதேச செயலகம் இவ்விடயம் தொடர்பில் பின்தொடர் நடவடிக்கை எடுக்கவில்லை. | அறிவுறுத்தல்களுக்காக மாவட்ட செயலகம், அனர்த்த முகாமைத்துவ அமைச்சு, அனர்த்த நிவாரண சேவை நிலையத்திற்கு அறிவிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டதுடன், இது தொடர்பில் எல்பிட்டிய பொலிஸ் குற்றப் புலனாய்வுப் பிரிவிலும் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாக தயவுடன் குறிப்பிடுகின்றேன். இது தொடர்பாக எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்து சம்பந்தப்பட்ட நிறுவனங்களிடம் ஆலோசனை கேட்கப்பட்டுள்ளது. | வேண்டியதுடதுன், சம்பந்தப்பட்ட தரப்பினர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (iii) | முழுத்தொகையான ரூபா 1,123,000 ஐ பெற்றுக் கொண்ட வாடுவெலிபிட்டிய தெற்கில் குடியிருப்பவர் வீட்டின் வேலைகளை பூர்த்தி செய்திருக்கவில்லை. நுகேதொட்ட குடியிருப்பாளர் ஒருவருக்கு ரூபா 900,000 வழங்கப்பட்டிருந்ததுடன் கணக்காய்வு திகதியான 2021 நவம்பர் 11 ஆந் திகதி வரையிலும் அனர்தத்திற்கு உட்பட்ட வீட்டில் குடியிருப்பது அவதானிக்கப்பட்டது. | நான்காவது தவணை செலுத்தத் தகுதியான நிலையில் இதுவரை நிர்மாணப் பணிகள் முடிவடையாததால் உரிய தொகை விடுவிக்கப்படவில்லை என்பதை தயவுடன் குறிப்பிட விரும்புகிறேன். எதிர்காலத்தில் எவ்வித உதவியும் பெறாமல் நிர்மாணப் பணிகளை முடிப்பதாக அவர் தெரிவித்துள்ளதுடன் அந்நிர்மாணப் பணிகள் நிறைவடைந்து அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட வீடு அகற்றப்பட்டதன் பின்னர் எதிர்வரும் கொடுப்பனவுகள் வழங்கப்படும் என மேலும் குறிப்பிடுகின்றேன். | நலன்களைப் பெற்ற பயனாளிகள் உரிய நோக்கத்தின்படி செயல்பட்டார்களா என்பதைப் பரீட்சித்து பின்தொடர் நடவடிக்கை எடுத்து நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஏ) | காலி 2000 ஆசனங்களைக் கொண்ட கேட்போர் கூடங்களை நிர்மாணிப்பதற்கு 2019 ஆம் ஆண்டின் போது ரூபா 2,656.877 மில்லியன் உடன்படிக்கை செய்யப்பட்டிருந்தது இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன | | |

| | | | |
|---|---|---|---|
| (i) | முதலாவது மதிப்பீடு ரூபா 1,700 மில்லியனாக இருந்த போதும் அமைச்ரவை தீர்மானத்தின் பிரகாரம் இரண்டு சந்தர்ப்பங்களில் முறையே ரூபா 2,657 மில்லியயன் மற்றும் ரூபா 3,155 மில்லியன் வரை 86 சதவீதத்தினால் மதிப்பீடு அதிகரிக்கப்படடிருந்தது. இதற்காக சாத்தியவள ஆய்வொன்று மேற் கொள்ளாமை காரணமாக இருந்தது. | இக்கணக்காய்வு விசாரணை கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவில் தீர்மானிக்கப்பட்ட பிரகாரம் உள்நாட்டு அலுவலகள் அமைச்சிற்கு அனுப்பிவைப்பதாக அறிவிக்கப்பட்டிருந்தது | கிரய மதிப்பீடு சரியாக மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ii) | உடன்படிக்கையின் பிரகாரம் வேலைகள் பூர்த்தி செய்யப்படாதிருந்ததுடன் ரூபா 874.785 மில்லியன் கொடுப்பனவு செய்யப் பட்டிருந்த பட்டியல் மற்றும் கையிலுள்ள பட்டியல் காணப்படுவதுடன் பௌதீக முன்னேற்றம் 15 சதவீதமும் அளவிலான குறைந்த மட்டமாகும். பூர்த்தி செய்யப்பட வேண்டிய வேலைகளுக்கு செலுத்த வேண்டிய தொகை ரூபா 238.953 மில்லியனாக இருந்தது. | - மேற்படி - | உடன்படிக்கையின் பிரகாரம் வேலைகள் பூர்த்தி செய்யப்பட வேண்டும் |
| (iii) | 2022 பெப்ரவரி 22 ஆந் திகதிய அமைச்சரவை உப குழுவினால் செயற்திட்டத்தின் பூர்த்தி செய்யப்படாத கட்டியெழுப்பல் ஏனைய செயற்பாடுகளுக்காக பயன்படுத்த முடியுமா என்பது தொடர்பாக பரீட்சித்து அறிக்கையிடுவதற்கு ஆலோசணை வழங்கப்பட்டிருந்த போதும் 2022 மார்ச் 31 வரையிலும் அந்நடவடிக்கைகள் இடம் பெறவில்லை. | - மேற்படி - | செயற்திட்டத்தின் பூர்த்தி செய்யப்படாத கட்டியெழுப்பல் ஏனைய பொருத்தமான ஆக்கபூர்வமான செயற்பாடுகளுக்காக பயன்படுத்த நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (iv) | கேட்போர் கூடத்தை நிர்மாணிப்பதற்கான தேவையை இனங்காணாத காரணத்தினால் அதற்காக செலவிடப்பட்ட ரூபா 874 மில்லியன் சிக்கனமற்ற செலவினமாக இருந்தது. நிர்மாணப் பணிகளுக்குப் | - மேற்படி - | செயற்தட்டத்தை பூர்த்தி செய்வதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுத்து செலவிட்ட பணத்திற்கு விளைவொன்றைப் பெற்றுக்கொள்ள செயற்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பயன்படுத்தப்படும் பல்வேறு இரும்புப் பொருத்துதல்கள், இரும்புக் குழாய்கள் மற்றும் நிர்மாணப் பணிகளுக்குப் பயன்படுத்தப்படும் இதர உபகரணங்கள், நிர்மாணப் பணி நடைபெறும் வளவின் பல இடங்களில் பாதுகாப்பற்ற நிலையில் அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. கட்டப்பட்ட தற்காலிக கட்டிடம் விளைவற்று காணப்படுகின்றது. இத்திட்டத்திற்காக கையேற்கப்பட்ட 2.709 ஹெக்டேயர் காணியும், செயற்திட்டம் செயல்படுத்தப்படாமல் இருந்தமையால் விளைவற்றதாக காணப்பட்டது. | | |
| (v) | வாடகை வேலைகள் மற்றும் முற்பணத்தின் கீழ் காலி ஆசனத்திற்காக 2000 புதிய கேட்போர் கூடத்தை நிர்மாணிப்பதற்காக வழங்கப்பட்ட 02 வருடங்கள் மிகைத்த மொத்தம் ரூபா 135.139 மில்லியனான 03 முற்பணங்கள் ஓராண்டை மிகைத்த ரூபா 199.949 மில்லியனான 03 முற்பணங்களும் மீளாய்வாண்டு இறுதித் தினத்தில் மொத்தமாக ரூபா 335.088 மில்லியன் முற்பண மீதி காணப்பட்ட போதிலும் அம்முற்பணத்தை தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | - மேற்படி - | தீர்வுசெய்யப்படாத வாடகை வேலை முற்பணத்தை தீர்வுசெய்வதற்கு அல்லது ஏனைய பொருத்தமான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (vi) | கேட்போர் கூடத்தை நிர்மாணிப்பதற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த ரூபா 250 மில்லியன் நிதிஏற்பாடுகளில் ரூபா 174.793 மில்லியன் சேமிக்கப்பட்டிருந்ததுடன் அது தொடர்பாக ஏற்றுக்கொள்ளக்கூடிய காரணங்கள் விளக்கங்கள் வழங்கப்பட்டிருக்கவில்லை | செயற்திட்டத்திற்காக அமைச்சரவை அங்கீகாரம் கிடைக்காமையால் 2021 சனவரி 29 ஆந் திகதியின் பின்னர் ஒப்பந்தகாலத்தை நீடிக்காமை காரணமாக நிதிஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. அந்த ஏற்பாடு மீண்டும் அமைச்சிற்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தது. | நிதிஏற்பாட்டினை முழுமையாக பயன்படுத்த நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஐ) | இரண்டு இலட்சம் சமுர்த்தி குடும்பங்களை அடிப்படையாக கொண்ட முழுமையான வீட்டு பொருளாதார அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் | | | |
| | (i) | 2021 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்ட முன்மொழிவுகளை நடைமுறைப்படுத்துவதற்காக, சமுர்த்தி, வீட்டுப் பொருளாதார, நுண் நிதி சுயதொழில் மற்றும் வர்த்தக அமைச்சிடமிருந்து நிகழ்ச்சிதிட்டத்திற்காக பெறப்பட்ட நிதிஏற்பாட்டின் அடிப்படையில் 7 சதவீத சலுகை வட்டி விகிதத்தில் 20 இலட்சம் வரை கடன் வழங்குவதற்கான விசேட திட்டம் செயல்படுத்தப்பட்டிருந்த போதும் அதன் கீழ் மாதம்பகம பிரதேச செயலகத்திற்கு ரூபா 4.140 மில்லியனும், 25,000 சமுர்த்தி பெறுனர் இளைய முயற்சியாளர்களை இலக்காக கொண்ட கிராம சேவையாளர் பிரிவுகளுக்காக வீட்டில் வியாபார நிலையங்களை அமைப்பதற்கு வெலிவிட்டிய திவித்துறை பிரதேச செயலாளருக்கு ரூபா 2.417 மில்லியனும் ஹபராதுவ பிரதேச செயலாளருக்கு ரூபா 3.897 மில்லியனும் வழங்கப்பட்டிருந்தன.<br>மாதம்பகம மற்றும் ஹபராதுவ பிரதேச செயலக வேலைத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படவில்லை.<br>வெலிவிட்டிய திவித்துறை பிரதேச செயலகத்தினால் 9 நலனாலிகள் தெரிவு செய்யப்பட்டு ஒருவருக்கு மாத்திரம் 500,000 ரூபா செலுத்தப்பட்டிருந்தது. | மாதம்பகம பிரதேச செயலகத்தின் வேலைத்திட்டத்திற்காக, 2021 திசம்பர் 31 ஆம் திகதி வரை தொடர்புடைய அனைத்து கொள்வனவு நடவடிக்கைகளும் பூர்த்தி செய்யப்பட்டிருந்தன.<br><br>ஹபராதுவ பிரதேச செயலகத்திற்கு போதிய நிதி ஒதுக்கீடு செய்யப்படாத காரணத்தினால் இந்த வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படவில்லை.<br><br>வெலிவிட்டிய திவித்துறை பிரதேச செயலகத்தினால் தெரிவு செய்யப்பட்ட ஒன்பது பயனாளிகளில் ஒருவர் மாத்திரம் தானாக முன்வந்து சமுர்த்தி மானியப் படிவத்தை மீள ஒப்படைத்துவிட்டு இருந்ததுடன் குறித்த பயனாளிக்கு ரூபா 500,000 கடன் தொகை வழங்கப்பட்டுள்ளது என்பதை தயவுடன் குறிப்பிட விரும்புகின்றேன். | திட்டமிடப்பட்ட பிரகாரம் நிகழ்ச்சித்திட்டங்களை செயற்படுத்த தேவையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| | (ii) | இதனுடன் தொடர்புடைய வேலைத்திட்டங்களின் பணிகளை முன்னெடுப்பதில் முன்னேற்றம் குறைந்த மட்டத்தில் இருந்ததால், 2021 திசெம்பர் 07 ஆந் திகதி திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட ரூபா 5.074 மில்லியனில் ரூபா 2 மில்லியனை மீளப் | நாட்டில் நிலவும் மோசமான கோவிட் தொற்றுநோய் நிலைமை காரணமாக பல திட்டங்களை முன்னெடுக்க முடியாதிருந்ததுடன் அந்நிலைமை தணிந்த பின்னர், 2021 ஆம் ஆண்டின் கடைசி காலாண்டில் பல | Covid 19 தொற்று நிலைமையுடன் பாதிக்கப்பட்ட வாழ்வாதாரத்தை கட்டியெழுப்பும் நோக்கில் வீட்டுப்பொருளாதாரத்தை பலப்படுத்துவதற்காக திட்டமிடப்பட்ட இந் நிகழ்ச்சித்திட்டங்களை |

| | | | |
|---|---|---|---|
| | கையேற்குமாறு மாவட்டச் செயலாளருக்கு அறிவிக்கப்பட்டது. அதன்படி, ஒதுக்கப்பட்ட பணத்தில் 39 சதவீதம் பயன்படுத்தப்படாமல் திருப்பி அனுப்பப்பட்டிருந்தது. | வேலைத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்ட மாவட்டத்தில் வேறொரு அலுவலகத்தின் பயன்பாட்டிற்காக அந்நிதிஏற்பாடு கையளிக்கப்பட்டது. | செயற்படுத்த நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஒ) | கிராம சக்தி மக்கள் வியாபாரம் | | |
| (i) | 19 பிரதேச செயலகப் பிரிவுகள் தொடர்பாக பதிவுசெய்யப்பட்ட 228 கிராமசக்தி மக்கள் சங்கங்களில், 214 மக்கள் சங்கங்கள் 2021 திசெம்பர் 31 வரை செயலற்ற நிலையில் இருந்த அந்தச் செயலற்ற சங்கங்களின் வங்கி வைப்புத்தொகையாக ரூபா 98.383 மில்லியன் மீதி செயலற்ற நிலையில் உள்ளது. திட்ட நடவடிக்கைகள் இடைநிறுத்தப்பட்டதன் காரணமாக அனைத்து சங்கங்களின் அரச வங்கிகளில் வைப்புச் செய்யப்பட்டிருந்த ரூபா 104.240 மில்லியன் பயனற்ற நிலையில் இருந்தது. | அமைச்சின் மூலம் இதற்காக சங்க செயற்பாடுகள் தொடர்பாக எதிர்காலத்தில் கொள்கை ரீதியான தீர்மானமொன்று எடுக்கப்பட்டுள்ளது. அதன்படி, எதிர்காலத்தில் இந்த சங்கங்களை தானாக செயல்படுத்த முடியும். | நிகழ்ச்சித்திட்டங்களின் நோக்கங்களை செயற்படுத்துதல் வருடக் கணக்காக தடைப்பட்டுள்ளதால் அதற்காக உரிய ஆலோசணை கிடைக்காமையால் செயலற்ற வங்கி மீதிகள் தொடர்பாக காலரீதியான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) | உள்ளக கட்டுப்பாட்டு முறைமை பலவீனமாக இருந்தமையால் குறித்த செயற்திட்டத்தை முறையாக செயற்படுத்தாமையால் 2018 மற்றும் 2019 ஆண்டுகளில் இதற்காக செலவிடப்பட்ட ரூபா 124.370 மில்லியனான செலவினம் விளைவற்று காணப்பட்டது. | நிகழ்ச்சித்திட்டம் தொடர்பாக அடுத்த நடவடிக்கைகள் தொடர்பாக முறையான ஆலோசணைகள் கிடைக்காமையால் கிராம சக்தி சங்கங்களை செயற்பாட்டு மட்டத்தில் பராமரிக்க முடியவில்லை | அவதானிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பில் நேரடியான பதிலொன்று வழங்கப்பட வேண்டும். |
| (iii) | 2021 மார்ச் 22 ஆந் திகதிய மாவட்ட செயலளார்களுக்கு அனுப்பிய கடிதத்தின் பிரகாரம் கிராம சக்தி வியாபாரத்தில் காணப்படும் பணத்தை மிக செயற் திறனாக, அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக ஈடுபடுத்தும் தேவைப்பாடு உள்ளதாக அறிவிக்கப்பட்டிருந்த போதும் அதற்காக திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | தற்போது கிராம சக்தி சங்க கணக்ககுகளில் காணப்படும் பணம் மிக செயற்திறனாக சமூக அடிப்படையிலான நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தும் தேவைப்பாடு தொடர்பாக வினவப்பட்ட தகவல் சௌபாக்கிய அபிவிருத்தி பணியகத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது | இலங்கையில் தற்போது காணப்படும் கடுமையான நிதி பற்றாக்குறை சிறியளவிலோ தவிர்ப்பதற்கு செயலற்ற வங்கி மீதிகளை ஆக்கபூர்வமாக பயன்படுத்த வேண்டும். |

## 2.4 பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் / கணக்கீட்டு உத்தியோகத்தரினால் மேற்கொள்ளப்பட வேண்டிய உறுதிப்படுத்தல்

பின்வரும் விடயங்கள் தொடர்பாக உறுதிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட வேண்டியிருந்த போதிலும், அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2018 இன் 19 இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 பிரிவின் ஏற்பாடுகளின் படி கணக்கீட்டு உத்தியோகத்தரினால் மாவட்ட செயலகத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்று தயாரிக்கப்பட்டு பேணப்படுகின்றதென பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்தவேண்டியிருந்துடன் அம் முறைமையின் ஆக்கபூர்வ தன்மை தொடர்பாக காலத்துக்கு காலம் மீளாய்வு மேற்கொள்ளப்பட்டு அதன்படி முறைமை பயன்தரு விதமாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்பட வேண்டியதெனவும், அம் மீளாய்வுகள் எழுத்துமூலம் மேற்கொள்ளப்பட்டு அதன் பிரதியொன்று கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், அவ்வாறான மீளாய்வுகள் மேற்கொள்ளப்பட்டதற்கான கூற்றுக்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | உள்ளகக் கணக்காய்வுத் திட்டம் தயாரிக்கப்பட்டு தேவையான பிரிவுகளுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாகவும் 02 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக் கூட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளதாகவும் அக்குழுவின் பரிந்துரைகள் தொடர்பாக பின்தொடர் செயற்பாடு எடுக்கப்படுவதாகவும் பிரதேச செயலகங்களில் 39 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக் கூட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளதாகவும் தயவுடன் அறிவிக்கின்றேன். | தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் படி செயற்பட்டு கணக்காய்விற்கு அறிக்கையிடப்பட வேண்டும். |

## 2.5 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணக்கமின்மை

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாண ஏற்பாடுகளுடன் இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து காட்டப்பட்டுள்ளன.

**அவதானிப்புக்கள்**

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | பெறுமதி | இணங்காமை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| | ரூபா | | | |
| (அ) இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப்பிரமாணம் 104 (4) | 173,840 | கெப் வண்டியொன்று 2021 யூன் 19 ஆந் திகதி விபத்திற்கு உட்பட்டிருந்ததுடன் ஏற்பட்ட நட்டத்தை மீள்நிரப்புவதற்காக ரூபா 173,840 ஆன கிரயமொன்றை செலவிட நேர்நதிருந்தது. சாரதியின் கவனயீனம் காரணமாக குறித்த விபத்து நிகழ்ந்துள்ளதாகவும் 2022 ஏப்ரல் 30 ஆந் திகதி வரையிலும் வாகனம் விபத்துக்குள்ளாகி 10 மாதங்கள் கடந்திருந்த போதும் விபத்து தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | இது தொடர்பாக 2022 மே 31 ஆந் திகதிக்கு முன்னர் குழு அறிக்கையைப் பெற்று சமர்ப்பிக்கின்றேன். | விரைவில் பரிசோதனை அறிக்கை பெற்றுக்கொண்டு தேவையான அனைத்து நடவடிக்கைகளை எடுத்து அறிக்கை இட வேண்டும். |
| (ஆ) பொது நிர்வாகச் சுற்றறிக்கை | | | | |
| (i) 2016 திசெம்பர் 29 திகதிய 30/2016 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கை | | ஒவ்வொரு எரிபொருள் பரிசோதனை யின் பின்னர் 12 மாத கால எல்லையின் பின்னர் அல்லது 25,000 கி.மீ தூரம் ஓட்டத்தில் ஈடுபடுத்திய பின்னர் அல்லது இயந்திரம் தொடர்பாக பிரதான திருத்தமொன்றின் பின்னர் அல்லது காரணங்களுக்கு | 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் எரிபொருள் எரிவு பரிசோதனை முறையாக மேற்கொள்ளாதிருந் ததுடன் இவ்வாண்டிற்குரிய 05 வாகனங்களின் எரிபொருள் எரிவு பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு | குறித்த சுற்றறிக்கை யின் படி செயற்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | இடையே முதலாவது சந்தர்ப்பத்தின் பின்னர் மீண்டும் எரிபொருள் பரிசோதனை மேற்கொள்ள வேண்டிய போதிலும் 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் அதற்குரியதாக நடவடிக்கை எடுக்காத வாகனங்கள் 07 காணப்பட்டன. | ள்ளன. | |
| (iii) | 1992 ஆகஸ்ட் 19 ஆந் திகதிய 26/92 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கை | அரச வாகனங்களில் அரச இலட்சிணை இடவேண்டிய போதிலும் காலி மாவட்ட செயலகத்தின் 04 வாகனங்களில் அரச இலட்சிணை பொறிக்கப்படாத வாகனங்கள் ஓட்டத்தில் ஈடுபடுத்தப்பட்டிருந்தது. | விரைவில் இந்த வாகனங்களுக்காக அரச இலட்சிணையை பொறிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக குறிப்பிடுகின்றேன். | சுற்றறிக்கை அறிவுரையின் படி செயற்பட வேண்டும். |

**2.6 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | (i) | தாபன விதிக்கோவையின் XIX ஆம் அத்தியாயத்தின் 2.3.1 உப பந்தியின் பிரகாரம் ரூபா 30,175 இனை விட சம்பளத்தை பெறும் பதவிநிலை உத்தியோகத்தர்களுக்கு 1991 சதுர அடிக்கு மேற்படாத அளவில் அரசின் வீடு வழங்கப்பட வேண்டிய போதிலும் அதற்கு முரணாக 10,015 சதுர அடி ஆன வீடொன்று நிர்மாணிக்கப் பட்டிருந்ததுடன் 2020 ஆம் ஆண்டில் ஏப்ரல் முதல் 2021 திசெம்பர் வரை மாவட்ட செயலாளர் உத்தியோகபூர்வ விடுதிக்கான பராமரிப்பு செலவினம் மாத்திரம் ரூபா 1.504 மில்லியன் மாத்திரமாக இருந்தது. | மாவட்டத்தின் பிரதான பதவிநிலை உத்தியோகத்தரின் உத்தியோகபூர்வ விடுதி என்பதால் அதற்கு பொருந்தும் வகையில் தயாரிக்கப்பட்டுள்ளது. மாவட்ட செயலாளரின் உத்தியோகபூர்வ விடுதியில் 2020 ஏப்ரல் முதல் 2021 திசெம்பர் வரை நீர், மின்சாரம் வீதவரி மற்றும் பாதுகாப்பு கட்டணங்களுக்காக ரூபா 1,504,688 ஆன செலவினமொன்று மேற்கொள்ளப்பட்டதுடன் அதில் ரூபா 1,361,662 ஆன செலவினம் பாதுகாப்பு சேவைக்கென தயவுடன் அறிய தருகின்றேன் | தாபனவிதிக் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ii) | மாவட்ட செயலாளர் உத்தியோகபூர்வ விடுதி நிர்மாணிக்கப்படும் போது அந்த ஒப்பந்த நிறுவனத்தின் மூலம் முறையற்ற சவகையில் ரூபா 3.948 மில்லியனான மேலதிக வேலை விடயங்களைச் சேர்த்து அந் நிர்மாணத்திற்குரியதல்லாத எனினும் அதற்கு அண்மித்து கேபின் சுவர் நிர்மாணிக்கும் நிர்மாணத்திற்குரிய மழை நீர் வழிந்தோடுவதற்காக வடிகாண் முறைமையொன்று நிர்மாணிக்கப்பட்டிருந்தது. | இவ்வடிகாண் முறைமையின் நிர்மாண வேரைலகள் உத்தியோகபூர்வ விடுதி நிர்மாணத்தின் பின்னர் மேற்கொள்ளல் நடைமுறையாக இருப்பதால் அத்தேவைப்பாடு மேற்கொள்ள வேண்டிய செயற்பாடாக இருப்பதால் மாவட்ட செயலாளர் உத்தியோகபூர்வ விடுதியின் பாதுகாப்பிற்கான மேலதி செயற்பாடொன்றாக உள்ளடக்கப்பட்டுள்ளது. | திட்டத்திற்கு அனைத்து நிர்மாணங்களையும் உள்ளடக்கி மதிப்பீடு தயாரித்து சமர்ப்பிக்கப்பட வேண்டியதுடன் மேலதிக வேலைகளுக்காக உரிய அங்கீகாரம் பெற்றுக்கொள்ள வேண்டும். |
| (ஆ) | மாவட்ட செயலகத்தின் உத்தியோகபூர்வ விடுதி முன்னால் கேபியன் தடுப்புச் சுவர் நிர்மாணம் | | |
| (i) | பட்டகன்வில மாவட்ட செயலக உத்தியோகபூர்வ விடுதியின் முன்னால் கேபியன் தடுப்பு சுவர் நிர்மாணத்திற்காக ரூபா 8.025 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. கேபியன் தடுப்பு சுவர் நிர்மாணத்திற்கு அண்மித்து உத்தியோகபூர்வ விடுதி அமைந்துள்ள காணியில் ஏற்பட்டிருந்த மண்சரிவின் பின்னர் 2018 மே 15 ஆந் திகதி கட்டிட ஆராய்ச்சி நிறுவனத்தினால் இடப்பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருந்தது, அதில் குறிப்பிடப்பட்ட பரிந்துரைகளுக்கு அமையாமல் கேபியன் சுவர் நிர்மாணித்தமை காரணமாக 2019 ஒக்தோபர் 24, 25 ஆகிய இரண்டு நாட்களில் சுவரின் பகுதியொன்று உடைந்து விழுந்து சுவருக்கு சேதம் ஏற்பட்டிருந்தது. | கட்டிட ஆராய்ச்சி நிறுவனத்தின் அறிக்கையின் பிரகாரம் மாவட்ட செயலாளர் உத்தியோகபூர்வ விடுதி காணப்படும் காணியில் நீர் வழிந்தோடுவதற்காக வடிகாண் முறைமையொன்று அமைத்தல் பரிந்துரைக்கப்பட்டிருந்த போதும் அதுவரை கேபியன் சுவர் நிர்மாணிக்கும் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டன. மேற்படி NBRO அறிக்கையின் பரிந்துரையான வடிகாண் முறைமை அமைக்கும் செயற்பாடு மாவட்ட செயலாளர் உத்தியோகபூர்வ விடுதி நிர்மாணத்துடன் மேற்கொள்ள வேண்டியதால் அதன் பிரகாரம் வடிகாண் முறைமை நிர்மாணம் இடம்பெற்றுள்ளது. இந்நிர்மாண நடவடிக்கைகள் மேற்கொள்ளும் போது பெய்த அதிக மழை காரணமாக மண் உடைந்து விழுந்து | இடம்பெற்ற சேதம் தொடர்பாக முறையான பரிசோதனையொன்று மேற்கொண்டு பொறுப்புக் கூற வேண்டிய உத்தியோகத்தரிடமிருந்து இழப்பினை மீள்நிரப்ப வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | சுவரின் ஒரு பகுதிக்கு சேதம் ஏற்பட்டிருந்தது. | |
| (ii) | குறித்த கேபியன் மதில் விழுந்தமையால் அதனை உரிய நிலைக்கு கொண்டு வருவது தொடர்பாக 2020 ஏப்ரல் 10 ஆந் திகதி ரூபா 486,000 தொகையை அறவிட்டு தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனத்தினால் வழங்கப்பட்ட அறிக்கைக்கு இணங்க மற்றும் அதன் பரிந்துரைகளின் பிரகாரம் சுவரை மீண்டும் கட்டியெழுப்பும் செயற்பாடு கேபியன் சுவருக்கு சேதம் ஏற்பட்டு 2 வருடங்கள் 06 மாதங்களுக்கு மேற்பட்ட காலமொன்று கடந்திருந்த போதும் பூர்த்தி செய்யப் பட்டிருக்கவில்லை. | மதிலை உரிய நிலைக்கு கொண்டு வருவதற்காக ஒப்பந்தக்காரருக்கு பல தடவை அறிவிக்கப்பட்டிருந்தது. எனினும் 2022 ஆம் ஆண்டின் சனவரி மாதம் அளவிலேயே வேலை ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் கேபியன் மதிலின் பகுதியொன்று மாத்திரம் மீண்டும் அமைக்கப்பட்டுள்ளது. | இடம்பெற்ற சேதம் தொடர்பாக முறையான பரிசோதனையொன்றை மேற்கொண்டு பொறுப்புக் கூற வேண்டிய உத்தியோகத்தர்களிடமிருந்து இழப்பினை மீள்நிரப்ப வேண்டும். |
| (iii) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணம் 104 (1) இன் பிரகாரம் கேபியன் சுவர் விழுந்தமை தொடர்பாக பரிசோதனையொன்று ஆரம்பிக்கப்படாமல் சுவர் விழுந்ததால் இடம்பெற்ற சேதத்தை மதிப்பீடு செய்வதற்கான குழுவொன்று சுவர் விழுந்து ஒரு வருடத்திற்கு பின்னர் அதாவது 2020 நவம்பர் 16 ஆந் திகதி நியமிக்கப்பட்டிருந்தது. மேலும் நிதிப் பிரமாணம் 104 (3) மற்றும் (4) இன் பிரகாரம் இடம்பெற்றிருந்த சேதம் தொடர்பாக 7 நாட்களுக்குள் ஆரம்ப அறிக்கை மற்றும் 3 மாதங்களுக்குள் பூரண அறிக்கையும் சமர்ப்பிக்கப் பட்டிருக்கவில்லை | அக்காலப்பகுதியில் ஒப்பந்தக்காரரைக் கொண்டு சேதமடைந்த சுவரின் பகுதியை உரிய நிலைக்கு கொண்டு வருவதற்கு முயற்சி எடுக்கப்பட்டதுடன் பின்னர் சேதத்தை மதிப்பீடு செய்யும் குழுவொன்றும் நியமிக்கப்பட்டு இது தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | சேதமடைந்து நியாயமான காலத்திற்குள் பரிசோதனையொன்றை ஆரம்பிக்காமை, அச் சேதம் தொடர்பாக நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்காமை தொடர்பாக பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். சுயாதீன பரிசோதனை குழுவொன்று நியமனம் செய்யப்பட்டு பொறுப்பானவர்களை இனங்கண்டு நிதிப் பிரமாணம் 156(1) இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (iv) | உடைந்து விழுந்த கேபியன் தடுப்பு மதிலின் ஒரு பகுதி பிரதி பிரதான செயலாளர் பொறியியல் சேவை உத்தியோகபூர்வ இல்லத்திற்கு பின்புறமாக உடைந்து விழுந்தமை மற்றும் கேபியன் மதிலின் மற்றைய பகுதி வீட்டுப் பக்கத்திற்கு வளைந்து சென்றுள்ளதால் வீட்டில் குடியிருப்பது ஆபத்தாக இருப்பதால் அவ்வீடு 02 ஆண்டு காலப்பகுதி அளவில் | மதிலை உரிய நிலைக்கு கொண்டு வருவதற்காக தற்போது நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது | உத்தியோக பூர்வ இல்லத்தை பயன்படுத்தக் கூடிய நிலைமைக்கு கொண்ட வர நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

மூடி வைக்கப்பட்டிருந்தது.

| | | | |
|---|---|---|---|
| (v) | 2008 யூன் 26 ஆந் திகதிய 13/2008 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் 04 ஆம் பிரிவிற்கு முரணாக மாவட்ட செயலக உத்தியோகபூர்வ வாகனத்திற்கு 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளின் போது பெற்றுக் கொண்ட ரூபா 280,373 கூட்டுப்பெறுமதியான 2,609 லீற்றர் எரிபொருளுக்கு அமைச்சு செயலாளரின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. அதன் பிரகாரம் 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் சில மாதங்களில் உத்தியோகபூர்வ வாகன எரிபொருள் படிகளை அனைத்து கடமை பிரயாணங்களுக்காக போதுமாக இருக்கையில் மேலதிக எரிபொருள் படிகள் பெற்றுக் கொள்ளப்பட்டிருந்ததுடன் சில மாதங்களில் மேலதிக பிரயாணத் தேவையை விட கூடுதலாக மொத்தம் 1,927 லீற்றருக்காக பெற்றுக் கொள்ளப்பட்டிருந்த ரூபா 207,460 தொகையான மேலதிக எரிபொருள் படிகள் பாயன்படுத்தப்படாமல் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. | 2013 ஆகஸ்ட் 15 மற்றும் 16 ஆந் திகதிகளில் நடைபெற்ற மாவட்ட செயலாளர்களின் மாநாட்டில் எடுக்கப்பட்ட தீர்மானத்தின் பிரகாரம் அமைச்சு செயலாளரினால் விநியோகிக்கப்பட்ட 2013 செப்தெம்பர் 30 ஆந் திகதிய கடிதத்தின் பிரகாரம் நிறைவேற்றிய நிகழ்ச்சித்திட்டத்திற்கு மேலதிக கடமைகளை உள்ளடக்கி அங்கீகாரத்தை பெற்றுக் கொண்டால் குறித்த மேலதிக எரிபொருளை பெற்றுக்கொள்ள முடியும் மாவட்ட செயலக உத்தியோகபூர்வ வாகனம் மாவட்டத்திற்கு வெளியே கடமைகளுக்காக செல்லும் போது குறிக்கப்பட்ட லீற்றர் அளவில் மேலதிக எரிபொருட்களை பெற்றுக் கொள்ளலாம். | மேலதிக எரிபொருட்களை பெற்றுக் கொள்ள வேண்டியிருந்தால் அப்பிரயாணம் மாதாந்த முன்னோடி நிகழ்ச்சித்திட்டம் மற்றும் செய்யப்பட்ட நிகழ்ச்சித்திட்டம் மூலம் அங்கீகரிக்கப்பட வேண்டியதுடன் தடுத்து வைக்கப்பட்டிருந்த மேலதிக எரிபொருள் படியை அரசின் வருமானத்திற்கு செலவு வைக்க வேண்டும். |

## 2.7 வைப்பு மீதிகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் இறுதி திகதியில் உள்ளவாறு பொது வைப்புக் கணக்கில் 2015 ஆம் ஆண்டிலிருந்து வரும் ரூபா 167.993 மில்லியனான மீதியொன்று 102 வீதி காபட் செயற்திட்டங்களுக்கு உரிய வேலைகள் பூர்த்திசெய்யப்படாமை காரணமாக வைப்புக்கள் கணக்கில் நிறுத்தி 06 ஆண்டுகள் கடந்திருந்த போதும் குறித்த செயற்பாடுகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை | இந்த நிறுத்திவைத்தல் பணத்தை விடுவிப்பதற்கு குழுவொன்று நியமனம் செய்யப்பட்டுள்ளதாகவும் இதுவரை அக்குழு அறிக்கைக்குரியதாக அமைச்சரவை பத்திரமொன்று சமர்ப்பிக்கப் படாதிரந்ததுடன் தொழில் நுட்ப பரிந்துரை வழங்கப்பட்டதன் பின்னர் | இது தொடர்பாக துரிதமாக பின்தொடர் நடவடிக்கைஎடுத்து குறித்த முற்பணத்தை அறவிட்டதன் பின்னர் பிடிகாசினை தொகையை விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | அறவிடப்பட வேண்டிய முற்பணத்தை அறவிட்டதன் பின்னர் நிறுத்திவைத்தல் தொகையை விடுவிப்பதற்கு இயலுமை உள்ளதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | |
| (ஆ) | பொது வைப்புக் கணக்கில் உள்ளடக்கப்பட்ட ரூகபா 15.968 மில்லியனான 33 செயற்திட்டங்களுக்காக கழிக்கப்பட்டிருந்த பிடிகாசினை தீர்வுசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இந்த நிறுத்தி வைத்தல் பணத்தை விடுவிப்பதற்கு குழுவொன்று நியமனம் செய்யப்பட்டுள்ளதாகவும் இதுவரை அக்குழு அறிக்கைக்குரியதாக அமைச்சரவை பத்திரமொன்று சமர்ப்பிக் கப்படாதிருந்ததுடன் தொழில்நுட்ப பரிந்துரை வழங்கப்பட்டதன் பின்னர் அறவிடப்பட வேண்டிய முற்பணத்தை அறவிட்டதன் பின்னர் பிடிகாசு தொகையை விடுவிப்பதற்கு இயலுமை உள்ளதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | - மேற்படி - |
| (இ) | கடவத் சதர பிரதேச செயலகத்திற்குரிய வீதி அபிவிருத்தி அதிகாரசபையால் வைப்புச் செய்யப்பட்டிருந்த ரூபா 7.185 மில்லியனான காணி கையேற்றல்களுக்குரிய 17 வைப்புக்கள் தீர்வுசெய்யப்படாத வழக்குகள் காரணமாக 10 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக விடுவிக்கப்படாமல் பொது வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. | வைப்புக்கள் மீதி ரூபா 7,185,450 தொகையை விடுவிப்பதற்கு வெவ்வேறு காரணங்கள் தாக்கமளித்திருந்தது. | வைப்புப் பணத்தை விடுவிப்பதற்கு தாக்கமளித்துள்ள காரணங்களை தீர்வு செய்து பொருத்தமான நடவடிக்கை எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) | நிதிப் பிரமாணம் 571(2) மற்றும் (3) இன் பிரகாரம் ரூபா 319.531 மில்லியனான காலாவதியான வைப்புக்கள் தொடர்பாக பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கணக்காய்வு அவதானிப்புடன் இணங்குவதாக அறிய தருகின்றேன். | காலாவதியான வைப்புக்கள் தொடர்பாக உரிய நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்து கணக்காய்வு அறிக்கையிடப்பட வேண்டும். |

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 திட்டமிடல்

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | காலி மாவட்டத்தின் 03 புதிய பிரதேச செயலகங்களை நிறுவுவதற்கு ரூபா 7.994 மில்லியனான நிதிஏற்பாடு ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த போதும் அது தொடர்பாக செயல் நடவடிக்கைத் திட்டத்திலும் பெறுகை திட்டத்திலும் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை | 2021 ஆம் ஆண்டின் செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்படும் சந்தர்ப்பமான ரத்கம, மாதம்கம மற்றும் வதுரம்ப என என்ற வகையில் 3 பிரதேச செயலகங்கள் பௌதீக ரீதியாக திட்டவட்டமாக நிறுவப்படாதிருந்தமையளால் 2021 ஆம் ஆண்டில் செயற்படுத்தப்படும் அபிவிருத்தி திட்டத்தில் அந்த 03 பிரதேச செயலகங்களும் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | 03 பிரதேச செயலகங்களை நிறுவு வதற்கு உரிய வர்த்தமானி 2019 ஒக்தோபர் 29 ஆந் திகதிய வர்த்தமானி மூலம் 2021 ஆம் ஆண்டில் செயல் அபிவிருத்தி திட்டத்திற்கு அது உள்ளடக்கப்பட வேண்டியிருந்தது. |
| (ஆ) | செயல் நடவடிக்கைத் திட்டத்தில் ஹோல் டீ கோல் மண்டபம், ஆண்டின் இலக்கிடப்பட்ட மண்டப ஒதுக்கீடு 50 சந்தர்ப்பங்களுக்காக ரூபா 3.5 மில்லியன் கட்டணமொன்று அறவிட்டு அரச வருமானத்திற்கு செலவு வைப்பதற்கு இலக்கிடப்பட்டிருந்த போதும் உள்ளவாறாக ரூபா 687,000 தொகை உழைக்கப்பட்டிருந்தது. | Covid 19 தொற்று நிலைமையை கட்டுப்படுத்து வதற்காக எடுக்கப்பட்டிருந்த நடவடிக்கைகளால் இலக்கிடப்பட்டிருந்த வருமான மட்டத்தை அடைந்துகொள்ள முடியாதிருந்ததாக மேலும் தயவுடன் குறிப்பிடுகின்றேன். | ஹோல் டீ கோல் மண்டபம் மாவட்ட செயலகத்தின் பிரதான வருமானத்தை உழைக்கும் வழியாக இருப்பதால் செயலாற்றல் அறிக்கையில் உள்ளடக்கப்பட வேண்டும். |

3.2 செயற்திட்டத்தை பூர்த்தி செய்யாமல் கைவிடப்பட்டிருந்தமை

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பிரதேச செயலகங்களின் செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட செயற்திட்டங்களில் 18 பிரதேச செயலகங்களுக்குரியதாக மதிப்பீடு செய்யப்பட்ட ரூபா 1,121,372 மில்லியன் கிரயமான 133 செயற்திட்டங்கள் நிறைவேற்றப்படாமல் கைவிடப்பட்டிருந்தன | கடந்த ஆண்டில் சில பொருட்களின் விலைகள் அசாதாரணமாக அதிகரித்தமை சந்தையில் சில பொருட்கள் பற்றாக்குறையாக இருந்தமை உள்ளிட்ட விடயங்கள் காரணமாக இச்செயற்திட்டங்களை கைவிட்டதால் திருத்தம் செய்யப்பட்டிருந்தது. | செயல் நடவடிக்கைத் திட்டம் நடைமுறைச் சாத்தியமாக இருக்க வேண்டியதுடன் அதில் உள்ளடக்கப்படும் அனைத்த செயற்திட்டங்களையும் செயற்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 3.3 வருடாந்த செயலாற்றல் அறிக்கை

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| வருடாந்த செயலாற்றல் அறிக்கையின் பிரகாரம் ஒதுக்கீடு செய்யப்பட்ட மூலதன நிதிஏற்பாடு ரூபா 314.500 மில்லியன் தொகையில் ரூபா 135.802 மில்லியன் செலவிடப்பட்டிருந்ததுடன் ஒதுக்கீடு செய்த நிதிஏற்பாட்டில் சதவீதமாக 43 சதவீதம் போன்ற குறைந்த பெறுமதியாக இருந்தது. | நிதிக்கூற்றுக்கள் 2021 இல் ACA-2(ii) படிவத்தில் குறிப்பிடப்பட்டிருந்த தெளிவுபடுத்தற்குரியதாக தயவுடன் அறிய தருகின்றேன். | ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதிஏற்பாடுகள் முழுவதையும் பயன்படுத்தி நாட்டின் அபிவிருத்திக்கு கூடிய பங்களிப்புச் செய்ய வேண்டும். |

### 3.4 பெறுகைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2006 அரசின் பெறுகை வழிகாட்டல் கோவையின் 4.2 (அ), (ஆ) மற்றும் (இ) பிரிவின் பிரகாரம் பெறுகை நிறுவனத்தினால் 03 ஆண்டு காலப்பகுதிக்காக பிரதான பெறுகை திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் பிரதான பெறுகை திட்டம் 2021 ஆம் ஆண்டிற்காக மாத்திரம் தயாரிக்கப்பட்டிருந்தது. | அடுத்துவரும் ஆண்டிற்காக மாத்திரம் பிரதான பெறுகை திட்டமொன்று தயாரித்தல் இதுவரை மேற்கொள்ளப்பட்டிருந்தது | அரசின் பெறுகை வழிகாட்டல் கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | காலி மரபுரிமைகள் மன்றத்திற்கு வழங்கப்பட்டிருந்த மாவட்ட செயலகத்திற்குரிய கெப் வண்டியொன்று 2019 ஒக்தோபர் 14 ஆந் திகதி மீண்டும் கையேற்கப்பட்டிருந்ததுடன் இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் 128(உ) பிரிவிற்கு இணங்கும் வகையில் நடவடிக்கை எடுக்காமை காரணமாக கெப் வண்டி 02 ஆண்டுகளுக்கு அண்மித்த காலமாக கராஜ் ஒன்றுக்கு அண்மையில் சிதைவடைந்து காணப்படுவது அவதானிக்கப்பட்டது. | 2012 முதல் 2019 வரையான காலப்டபகுதியில் காலி மரபுரிமைகள் மன்றத்திற்கு உரித்தாக இருந்ததுடன் 2019 மே முதல் ஓட்டத்திலிருந்து அகற்றப்பட்டிருந்தது. சம்பவப் பதிவேட்டுக் குறிப்புக்கள் பராமரித்தல் காலி மரபுரிமைகள் மன்றத்தின் பொறுப்பாகும். | நீண்டகாலமாக திறந்தவெளியல் வண்டி சிதைவடைந்தமையால் வண்டியின் பெறுமதி குறைவடைவதால் துரிதமாக கைதவிர்ப்பு செய்ய வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வண்டியின் சம்பவப் பதிவேட்டுப் புத்தகத்தின் பிரகாரம் பதிவு செய்யப்பட வேண்டிய தகவல்களும் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஆ) | மாவட்ட செயலக உத்தியோகபூர்வ விடுதி | | |
| (i) | மாவட்ட செயலகத்தின் நிர்வாக உத்தியோகத்தருக்கு ஒதுக்கபட்டிருந்த உத்தியோகபூர்வ இல்லம் 2004 ஆம் ஆண்டு முதல் பிரதமரின் தனிப்பட்ட செயலாளருக்கும் முன்னால் பிரதி அமைச்சரொருவரின் அலுவலகமொன்றாக பராமரித்துச் செல்லப்பட்டிருந்தது. 2015 ஆம் ஆண்டு மீண்டும் மாவட்ட செயலாளருக்கு கையளிப்பு முறையாக இடம் பெற்றிருக்கவில்லை. | பிரதமரின் தனிப்பட்ட செயலாளருக்கு கையளித்து மீண்டும் அரசிற்கு கையளிக்கப்பட்டிருந்த போதும் முன்னால் பிரதி அமைச்சராலே பயன்படுத்தப்பட்டிருந்தது. இந்த ஆதனம் அழிவடையக்கூடிய மற்றும் இல்லாமல் போபகும் ஆபத்தொன்று உள்ளமையால் மாவட்ட செயலகத்தின் மூலம் பொறுப்பேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | அரசிற்கு சொந்தமான ஆதனங்களை வேறு தரப்பினருக்கு பயன்பாட்டிற்காக வழங்கும் போது தாபன விதிக்கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ii) | இக்கட்டிடத்தை 2018 யூன் 07 ஆந் திகதி வரிசை அமைச்சின் அங்கீகாரத்தை பெற்றுக்கொள்ளாமல் காலி மரபுரிமைகள் மன்றத்திற்கு வழங்கப்பட்டிருந்ததுடன் மதிப்பீட்டு அறிக்கையொன்றைப் பெற்று அத்தொகை உடன்படிக்கை செய்து வாடகை அடிப்படையில் குறித்த நிறுவனத்திற்கு வழங்குமாறு பொது நிர்வாக அமைச்சினால் அறிவிக்கப்பட்டிருந்த போதும் கணக்காய்வு திகதியான 2022 மே 31 வரை குறித்த மதிப்பீட்டு அறிக்கை பெற்று வாடகையை கணிப்பிடும் செயற்பாடு ஆரம்பிக்கப்பட்டிருக்க வில்லை. | காலி மரிபுரமைகள் மன்றம் நியதிச் சட்ட நிறுவனமொன்றாக இருப்பதால் நியதிச் சட்ட நிறுவனகத்திற்கு அலுவலகமொன்றை பராமரித்துச் செல்வதற்கு தற்காலிக அடிப்படையில் இக்கட்டிடம் கையளிக்கப்பட்டுள்ளதால் நிபந்தனைகள் இல்லாமல் உடன்படிக்கையின்றி வழங்கப்பட்டுள்ளதுடன் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சிற்கு வாடகை அறவிடுதல் தொடர்பாக தேவையான ஆலோசணைகளை கேட்டு அனுப்பிய கடிதத்திற்குபதிலாக பொது நிர்வாக அமைச்சு மூலம் இந்த அரசின் வீட்டுக்கரியதாக மதிப்பீட்டாளனரின் பரிந்துரையின் பிரகாரம் மதிப்பீட்டு அறிக்கையொன்றைப் பெற்று அத்தொகைக்கு உடன்படிக்கை கைச்சாத்திட்டு வாடகை அடிப்படையில் வழங்குமாறு அறிவிக்கப்பட்டிருந்தது. கிடைத்த ஆலோசணையின் பிரகாரம் மதிப்பீடு அறிக்கை யை வழங்குமாறு காலி | விரைவில் மதிப்பீட்டு அறிக்கையொன்றைப் பெற்று வாடகை அறவிடுவதை கணக்காய்விற்கு அறிக்கையிட வேண்டும் |

| | | | |
|---|---|---|---|
| | | மாவட்ட விலை மதிப்பீட்டு திணைக்களத்திற்கு கடிதம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. வீதவரி இலக்கத்தில் காணப்படும் சிக்கல் காரணமாக மதிப்பீட்டு அறிக்கையை பெற்றுக்கொள்ள முடியாமல் போனமை அடிப்படையில் வாடகை கணிப்பீடு ஆரம்பிக்க இயலுமை இல்லையென்பதால் மதிப்பீட்டு அறிக்கை கிடைத்தவுடன் விரைவில் சமர்ப்பிப்பதாக நடவடிக்கை எடுப்பேன். | |
| (இ) | 22 பிரதேச செயலகங்களுக்கு இடையே 13 பிரதேச செயலகங்களுடன் இணைக்கப்பட்ட உத்தியோகபூர்வ விடுதிகள் அமைக்கப்பட்டிருந்த போதும் அதற்கு இடையே 10 பிரதேச செயலகங்களில் உத்தியோகபூர்வ விடுதிக்ள குறைப்பயன்பாட்டுடனோ அல்லது உத்தியோக்த்தர் ஒருவரின் குடியிருப்பிற்கு பயன்படுத்தப்பட்டிருக்கிவல்லை. வீடமைப்பு நிர்மாணத்தின் நோக்கமான தனது அதிகாரப் பிரதேசத்தில் கடமைகளை மேற்கொள்ள இலகுவாக்குவதாக இருந்த போதும் அந்நோக்கம் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. | பலப்பிட்டிய, போப்பே, கோனாபினுவல பிரதேச செயலக உத்தியோகபூர்வ இல்லங்களில் தற்போது குடியிருக்கின்றனர். கரன்தெனிய, பத்தேகம, நியாகம, நெலுவ, ஹிக்கடுவ பிரதேச செயலகத்தின் உத்தியோகபூர்வ இல்லங்களின் திருத்த வேலைகள் நடைபெற்று வருகின்றன. யக்கஹமுல்ல பிரதேச செயலகத்தின் உத்தியோகபூர்வ விடுதி வேறு நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்படுகின்றது. | பிரதேச செயலாளர்களின் சேவை செயற்திறனாக இருக்க வேண்டும் என்ற எண்ணத்தில் நிர்மாணிக்கப்பட்ட உத்தியோகபூர்வ இல்லங்களை குடியிருப்புக்காக பயன்படுத்த வேண்டும். |

## 3.6 நட்டங்கள் மற்றும் சேதங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2020 ஆம் ஆண்டில் அம்பலாங்கொட பிரதேச செயலகத்தின் 02 வாகனங்கள் விபத்திற்கு உட்பட்டிருந்ததுடன் அதன் சேதம் ரூபா 217,600 ஆக இருந்தது. அதில் ரூபா 141,650 தொகை காப்புறுதி இழப்பீடாக கிடைத்திருந்ததுடன் எஞ்சிய தொகை ரூபா 75,950 ஆன நட்டம் தொடர்பாக நிதிப்பிரமாணம் 104 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இவ்விபத்துக்கள் தொடர்பாக தற்போது மாவட்ட நீதிமன்றத்தில் இரண்டு வழக்குகள் விசாரிக்கப்பட்டு வருவதுடன் தீர்ப்பு கிடைத்த பின் அடுத்த நடவடிக்கைகளை எடுப்பேன். | வழக்கு தீர்ப்பு கிடைத்த பின் அடுத்த நடவடிக்கை பூர்த்தி செய்யப்பட வேண்டும். |

**3.7 முகாமைத்துவ பலவீனங்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மாவட்ட செயலகத்தில் பதிவுசெய்யப்பட்ட 41 துப்பாக்கிகளுக்காக 02 வருடங்கள் முதல் 13 வருடங்கள் வரையான காலமாக அனுமதிப்பத்திரங்கள் பெற்றுக்கொள்ளப்படாதிருந்ததுடன் துப்பாக்கிகள் தொடர்பாக முறையான பின்தொடர் செயற்பாடொன்று எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் 65 வயது கடந்த பின்னர் அனுமதிப்பத்திரங்கள் நீடிக்கப்படாதிருந்த மற்றும் துப்பாக்கிகளை மீள ஒப்படைக்காத 08 சந்தர்ப்பங்களும் 70 வயது பூர்த்தியான பின்னர் துப்பாக்கிகளை மீள ஒப்படைக்காதிருந்த 04 சந்தர்ப்பங்கள் காணப்பட்டன. அல்பிட்டிய / காலி சிரேஷ்ட பொலிஸ் அதிகாரிகளுக்கு இது தொடர்பாக சட்ட நடவடிக்கை எடுக்குமாறு அறிவிக்கப்பட்டிருந்த போதும் அச்செயற்பாடு நிறைவேற்றப் பட்டிருக்கவில்லை. | அந்த அனுமதிப்பத்திர தாரர்களுக்கு வருடாந்தம் புதுப்பிப்பதற்குரிய இறுதி அறிவித்தல் அனுப்பியதன் பின்னர் தேவையான சட்ட நடவடிக்கைகள எடுக்குமாறு அல்பிட்டிய / காலி சிரேஷ்ட பொலிஸ் அதிகாரிக்கு அறிவிப்பது வருடாந்தம் மேற்கொள்ளப்படுகின்றது. | பதிவுசெய்யப்பட்டுள்ள அனைத்து துப்பாக்கிகள் வருடாந்த அனுமதிப்பத்திரங்களை புதுப்பிக்கும் காலம் முடிவடைவதற்கு முன்னர் அனுமதிப்பத்திரங்களை பெற்றுக்கொள்ள வேண்டுமென எழுத்துமூலம் அறிவிக்க வேண்டும். அனுமதிப்பத்திரதாரர் துப்பாக்கி உடமையாளர் வயது பூர்த்தியடைந்த பின்னர் துப்பாக்கியை மீள ஒப்படைத்தல் தொடர்பாக பின்தொடர் நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |
| (ஆ) | 2004 திசெம்பர் 26 ஆந் திகதி ஏற்பட்ட சுனாமி அனர்தத்தினால் இடம்பெயர்ந்த நபர்களுக்கு கோனாபினுவெல பிரதேச செயலகத்தினால் 26 வீட்டு நலனாலிகளுக்கு மானியப் பத்திரங்கள் வழங்கப்பட்டிருக்கவில்லை. | 2022 மார்ச் 03 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட நடமாடும் சேவையின் கீழ் தற்போது குடியிருப்போர் அலுவலகத்திற்கு அழைக்கப்பட்டு 2008/04 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் ஆரம்ப பரிசோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளது. அவர்களுக்காக மானியப் பத்திரங்கள் ஆரம்பிக்கப்படடுள்ளதுடன் அதனை விரைவில் பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். | காணி உரித்து மானியப் பத்திரங்கள் பகிர்ந்தளிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | வெலிவிட்டிய திவிதுர பிரதேச செயலகத்திற்கு வழங்கப்பட்டிருந்த 66 காணி உரித்துப் பத்திரங்களில் 2021 திசெம்பர் 31 ஆந் திகதி வரை 43 மானியப் பத்திரங்கள் பகிர்ந்தளிக்கப்பட்டிருக்கவில்லை. அம்மானியப் பத்திரங்களுக்கு இடையே 4 மானிய பத்திர உடமையாளர்கள் மரணமடைந்திருந்தனர். | வாரிசுகளை தெளிவாக இனங்கண்டு அதற்காக தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். எதிர்காலத்தில் மேற்படி மானியப் பத்திரங்களை உரிமையாளர்களுக்கு கையளிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வாரிசுகள் இல்லாத | காணி உரித்துப் பத்திரங்களை பகிர்ந்தளிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | மானியப் பத்திரங்கள் அது தொடர்பில் உறுதிப்படுத்திய பின்னர் தேவையான நடவடிக்கை எடுப்பதாக தயவுடன் அறிய தருகின்றேன். | |
| (ஈ) | பத்தேகம பிரதேச செயலகத்திற்குரிய 198 பீ கொதடுவ, 198 ஏ பத்தேகம தெற்கு, 184 பத்தேகம வடக்கு மற்றும் 1989 சீ அல்லகந்த வதுராவ ஆகிய கிராம சேவையாளர் பிரிவுகளுக்குரிய 1981, 1983 மற்றம் 1989 ஆம் ஆண்டுகளின் போது காணி வழங்கல் விசேட ஏற்பாடுகள் சட்டத்தின் கீழ் வழங்கப்படுகின்ற 34 கொடைப் பத்திரங்கள் குறித்த நலனாலிகளுக்கு வழங்குவதற்கு முடியாமல் அலுவலகத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்தன. | 29 கொடைப் பத்திரங்கள் தொடர்பாக மேலும் பரீட்சிக்கப்பட்டதன் பின்னர் இரத்துச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். எஞ்சிய கொடைப் பத்திரங்கள் தொடர்பாக ஆட்களுடன் இணக்கப்பாட்டிற்கு வந்ததன் பின்னர் அடுத்த நடவடிக்கைகள் எடுக்கப்படும். | கொடைப் பத்திரங்கள் உரிய காலப்பகுதியில் நலனாலிகளுக்கு வழங்கப்பட வேண்டியதுடன் அவ்வாறு வழங்க முடியாத சந்தர்ப்பத்தில் பொருத்தமானநடவடிக்கை எடுத்து கொடைப் பத்திரங்கள் இரத்துச் செய்யப்பட வேண்டும். |
| (உ) | 2021 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் ஹபராதுவ பிரதேச செயலகத்திற்குரிய 20 அனுமதிப்பத்திரதார்களிடமிருந்து 2011 ஆம் ஆண்டு முதல் அறவிடப்பட வேண்டிய நிலுவை அனுமதிப்பத்திர வருமானம் (மதுவரிக் கட்டணத்துடன்) ரூபா 22.368 மில்லியனை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் 18 நிறுவனங்கள் 902 ஆம் மது வரி அறிவித்தலின் 7 ஆம் பிரிவின் பிரகாரம் அனுமதிப்பத்திரக் கட்டணத்தை செலுத்தி மதுவரி அனுமதிப்பத்திரங்களை பெற்றுக்கொண்டு வியாபார நடவடிக்கைகளை மேற்கொண்டு வந்தன. | அனுமதிப்பத்திரங்களைப் புதுப்பிக்காத அனுமதிப்பத்திரதாரர்கள் தொடர்பான தகவல்கள் மது வரி ஆணையாளருக்கு அறிவித்தல், மதுவரி அனுமதிப்பத்திரத்தினை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்குமாறு அனுமதிப்பத்திரதாரர்களுக்கு எழுத்துமூலம் அறிவித்து அனுப்புதல் மற்றும் அனுமதிப்பத்திரக் கட்டணங்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் எங்களுக்கு கையளிக்கப்பட்டுள்ள கடமையாகும். இது தொடர்பாக நடவடிக்கை எடுக்கும் அதிகாரம் பிரதேச செயலகத்திற்கு இல்லையென்பதுடன் மது வரித் திணைக்களம் இது தொடர்பாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென அறிய தருகின்றேன். | மதுவரி அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் மற்றும் தாமதக் கட்டணங்களை அறவிடுவது பிரதேச செயலாளருக்கு கையளிக்கப்பட்டுள்ளதால் குறிப்பிடப்பட்டுள்ள நிலுவை கட்டணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் மதுவரி ஆணையாளரிற்கு அறிவிப்பதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 4. நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைதல்

-----------------------------------------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை செயற்படுத்துவதற்காக மாவட்ட செயலகத்தின் கடமைகள் மற்றும் தொடர்புரும் அக்கரை செலுத்தும் தரப்பினர் இனங்காணப்பட்டிருக்கவில்லை. | நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை செயற்படுத்துவதற்காக மாவட்ட செயலகத்தின் கடமைகள் மற்றும் தொடர்புரும் அக்கரை செலுத்தும் தரப்பினராக 19 பிரதேச செயலகங்கள் இனங் காணப்பட்டிருந்ததுடன் அந்த அலுவலகங்களின் 2021 ஆம் ஆண்டிற்காக செயற்படுத்தப் படும் திட்டங்களும் மாவட்ட செயலகத்தில் செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருந்தது. | நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் தொடர்பாக அக்கரை செலுத்தும் தரப்பினர் இனங்காணப்பட வேண்டும். |
| (ஆ) 2018 ஏப்ரல் 27 ஆந் திகதிய MSDW/08/65 ஆம் இலக்க நிலைபேறான அபிவிருத்தி மற்றும் வனசீவராசிகள் அமைச்சின் சுற்றறிக்கையின் பிரகாரம் நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் தேசிய மட்டத்தில் தந்திரோபாய முகாமைத்துவ திட்டத்தின் பிரகாரம் தாபன, மாகாண மற்றும் தேசிய மட்டத்தில் அடைந்துகொள்வதற்காக கூட்டிணைப்பதற்கு இரண்டு சிரேஷ்ட உத்தியோகத்தர்கள் பெயரிடப்பட்டு நிலைபேறான அபிவிருத்தி மற்றும் வனசீவராசிகள் அமைச்சிற்கு தொடர்புபடுத்தப்பட்டிருக்க வில்லை. | நிலைபேறான அபிவிருத்தி மற்றும் வனசீவராசிகள் அமைச்சின் இது தொடர்பாக வினவப்பட்ட போது அங்கு மாவட்ட செயலகத்தினால் உத்தியோகத்தர்கள் பெயரிடப்பட்டிருக்கவில்லை. தற்போது அந்த அமைச்சும் இயங்கும் நிலையில் செயற்படாமையால் மேலதிக ஆலோசணைகளைப் பெற்றுக்கொள்ள நிறுவனமொன்று இருக்கவில்லை. தற்போது இவ்விடயப் பரப்பிற்குரிய அமைச்சின் உத்தியோகத்தர்கள் பெயரிடல் எதிர்பார்க்கப்பட்டால் தமது உத்தியோகத்தர்களைப் பெயரிடும் இயலுமை காணப்படுவதாகவும் அறிய தருகின்றேன். | உரிய சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 5. மனித வள முகாமைத்துவம்

### 5.1 இணைக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளவாறான பதவியணியினரும்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சிரேஷ்ட மட்டத்தில் 05 உத்தியோகத்தர்கள், மூன்றாம் மட்டத்தில் 22 உத்தியோகத்தர்கள் மற்றும் ஆரம்ப மட்டத்தில் 03 உத்தியோகத்தர்களுக்கு வெற்றிடங்கள் காணப்பட்டன. இரண்டாம் மட்டத்திற்குரிய 114 அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், தகவல் தொழில்நுட்ப உதவியாளர் பதவியில் 10 உத்தியோகத்தர்கள் மற்றும் அபிவிருத்தி ஒருங்கிணைப்பாளர் பதவியில் 01 உத்தியோகத்தர் மிகையாக காணப்பட்டதுடன் தொழில்நுட்ப சேவை உததியோகத்தர் பதவிகளில் 15 உம் முகாமை சேவை உத்தியோகத்தர் பதவிகளில் 55 உம் கிராம சேவையாளர் பதவிகள் 146 உம் செயற்திட்ட உத்தியோகத்தர் பதவிகள் 02 உம் வெற்றிடங்களாக இருந்தன. | மாவட்ட செயலகததிற்கும் பிரதேச செயலகங்களிற்கும் இணைக்கப்பட்டுள்ள அங்கீகரிக்கப்பட்ட பதவியணிக்குரிய உத்தியோகத்தர்கள் எவரது நியமன அதிகாரி மாவட்ட செயலாளர் அல்ல. முறைப்படி வெற்றிடங்களை நிரப்பும் அதிகாரம் மாவட்ட செயலாளருக்கு இல்லாமையால் அவ்வெற்றிடங்களை நிரப்புவதற்காக அறிக்கை நியமன அதிகாரிக்கு அனுப்புதல் முறையாக மேற்கொள்ளப்பட்டுள்ளது. | முறையாக வெற்றிடங்களை நிரப்புவதற்கும் மிகை பதவியணியினர் தொடர்பாக பொருத்தமான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | (i) பலப்பிட்டிய பிரதேச செயலகத்தில் ஒவ்வொரு பிரிவுகளுக்கும் இணைக்கப்பட்டுள்ள 189 உத்தியோகத்தர்களுக்காக இடமாற்றல்கொள்கை முறையாக செயற்படுத்தப்படாதிருந்ததுடன் 35 உத்தியோகத்தர்களின் முதல் நியமனத் திகதியிலிருந்து 08 ஆண்டு அதே பிரதேச செயலகங்களில் சேவையில் ஈடுபட்டு வந்தனர். | இந்த அலுவலகத்தில் முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் அலுவலக உதவி உத்தியோகத்தர்கள் உட்பட ஏனைய அமைச்சுக்கள் திணைக்களங்களின் உத்தியோகத்தர்களும் சேவையில் இணைக்கபட்டுள்ளதுடன் அவர்களின் இடமாற்றம் மற்றும் உள்ளக இணைப்பு செய்தல் அந்தந்த நிறுவன தலைவர்கள் மூலமே என தயவுடன் அறிய தருகின்றேன். | முறையான இடமாற்றல் கொள்கையொன்று செயற்படுத்தப்படவேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ii) | 5 உத்தியோகத்தர்கள் 02 சந்தர்ப்பங்கள் முதல் 06 சந்தர்ப்பங்கள் வரை வருடாந்த இடமாற்றம் கோரியிருந்த போதும் இடமாற்றம் வழங்காமை காரணமாக அந்த உத்தியோகத்தர்கள் 06 வருடங்கள் முதல் 21 ஆண்டுகள் வரையான காலம் திவித்துர பிரதேச செயலகத்தில் சேவையில் ஈடுபட்டு வந்தனர். | வருடாந்த இடமாற்றத்தின் கீழ் விண்ணப்பிக்கும் அனைத்து உத்தியோகத்தர்களினதும் விண்ணப்பங்கள் பரிந்துரைக்கப்பட்டு ஒன்றிணைந்த சேவைகள் பணிப்பாளருக்கும் அந்தந்த நிறுவனத் தலைவர்களுக்கும் மாவட்ட செயலகத்திற்கு அனுப்பிவைக்கப்படுகின்றதுடன் 2022 ஆம் ஆண்டிற்கான இடமாற்றம் கோரிய விண்ணப்பதாரிகளுக்கு இடையே ஒரு உத்தியோகத்தர் அம்பலாங்கொடை பிரதேச செயலகத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளதாக தயவுடன் குறிப்பிடுகின்றேன். | முறையான இடமாற்றல் கொள்கையொன்று செயற்படுத்தப்பட வேண்டும். |